**நிர்மாண உத்தரவாத நிதியம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களினதும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 11(ஈ) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான

அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும், வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியத்தின் வங்கிக் கணக்குகளுக்குச் செய்யப்படும் நேரடி வைப்புகளை அடையாளம் காண்பதற்கு சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை இல்லாமையால், 2018 முதல் 2021 வரையிலான ஆண்டுகளில் நிதியத்தின் ஆறு வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 12,699,286 தொகையான அவ்வாறான நேரடி வைப்புத்தொகைகள் அடையாளம் காணப்படாமலும், கணக்குப் புத்தகங்களில் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகளைச் செய்யாமலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அடையாளம் காணப்படாத செலவுப் பதிவுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | வைப்பாளர்களை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் வைப்பாளர்களை கண்டறிவ தற்காக வங்கிகளிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறுவதற்கான செயல்பாட் டில் நிதியம் ஈடுபட்டுள்ளது. மொத்தம் ரூபா 12 மில்லியனில் அடையாளம் காணப்பட்ட ஏறத்தாழ ரூபா 3 மில்லியனுக்காக ஒரு சிக்க லான முயற்சி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த முயற்சியைத் தொடர்வதற்கு மேலும் கணிசமான காலம் எடுக்கும். | வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட நேரடி வைப்புக்களை இனங்கண்டு அவற் றை உரிய கணக்கு களில் பதிவு செய்வத ற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை (எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ்)

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 07 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்:** என்ற நியமத்தின் 65 ஆவது பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தக் கிரயத்தில் 35 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏறத்தாழ ரூபா 8,181,160 கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட அலுவலக உபகரணங்களும் ஏனையவைகளும், கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களும், தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் இணைப்புக்களும் அவ்வாறான சொத்துக் களின் பயன்தரு பொருளியல் ஆயுட் காலம் மீளமதிப்பீடு செய்யப்பட்டு, **எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 03 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்** இன் படி மதிப்பீட்டு வழுவைத் திருத்தி, நிதிக் கூற்றுக்களில் சரியான முன் கொண்டு செல்லும் பெறுமதியைக் காண்பிக்காது நிதியத்தால் அச்சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகையால், அந்தச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியானது ஒரு சொத்து விடயத்தின் ஆயுட்காலத்தை ஐந்தாண்டுகளாகக் கருதுவதுடன் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒருமுறை அல்லது இடையில் செய்யப்பட வேண்டிய பெரும்பாலான விடயங்கள் இருந்தால் அவை மீள்மதிப்பீடு செய்யப்படுகிறது. கடந்த 2014-ம் ஆண்டு, அடுத்த 2019-ம் ஆண்டு மற்றும் 2020-ம் ஆண்டுக்கான மீள் மதிப்பீடு கள் சுற்றுச்சூழல் பிரச்சினை களால் மேற்கொள்ளப்படாமல் இருந்தது. எனவே, நிலைமை சீரானதும், அந்த செயல்முறை மேற்கொள்ளப்படும். | முழுமையாகத் பெறு மானத் தேய்விடப்பட்ட சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது டன் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகா ரம் அவற்றை கணக்கீடு செய்தலும் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) முன்னைய ஆண்டிற்காக தயாரிக்கப் பட்டுள்ள காசுப் பாய்ச்சல் கூற்றின் கீழுள்ள முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் ரூபா 448,842 ஆனதோர் தொகை கைதவிர்க்கப்பட வேண்டிய மற்றும் அழிக்கப்பட்ட விடயமொன்றாக தவறுத லாக காண்பிக்கப்பட்டதாக கணக்காய் விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதி வரை கூட இந்த பிழை திருத்தப்பட்டிருக்க வில்லை. | இது காசுப் பாய்ச்சலை தயாரிக்கையில் இடம்பெற்ற ஒரு மனிதத் தவறாகும். ஆகையால், எந்தவொரு ஆதாரப்படுத்தும் ஆவணமும் இல்லை. இதனை நாம் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் திருத்துவோம். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட்டு, அனைத்து ஆதாரப் படுத்தும் ஆவணங் களும் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டிற்கான கணினி துணைக்கருவிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் | சுட்டிக் காட்டப்பட்டுள்ள வழு குறித்துக் கொள்ளப்பட்டதுடன் இதனை திருத்துவதற்கு நாம் | வங்கிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இனங்காணப்படாத |

| | | |
|---|---|---|
| தேய்மானம் தவறுதலாக ரூபா 223,668 ஆல் மிகைத்துக் கணக்கிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குறைத்தெழுதிய பெறுமதி மற்றும் ஆண்டிற்கான மிகை என்பன அதே அளவு தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | கவனம் செலுத்துவோம். | செலவு மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்து, அதன்படி கணக்குப் புத்தகங்களில் உரிய சீராக்கம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியன்று காணப்பட்ட ரூபா 81,621,647 தொகையான பெறப்பட வேண்டிய பிணைகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து ரூபா 13,411,839 மற்றும் ரூபா 352,931 தொகைகள் முறையே 01 முதல் 03 ஆண்டுகளிற்கு இடைப்பட்டும் 03 ஆண்டுகளிற்கு மேலாகவும் அறவிடப்படாது கணக்குகளில் வைத்திருக்கப்பட்டுள்ளன. | ஒரு கொள்கை என்ற வகையில், நிர்மாண ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் சலுகை நலனின் ஒரு பகுதியாக தாமதக் கொடுப்பனவுகளை நிதியம் ஏற்றுக்கொள்கிறது. 2017 முதல், ஒப்பந்ததாரர்களுக்கு முறையாக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஒப்பந்த வழங்குனர்கள் தொடர்ந்தும் தவறியிருந்தனர். ஆகையால் நிதியத்தால் அவற்றை அறவிட முடியாதுள்ளது.<br><br>2020, 2021 மற்றும் 2022 இல் கூட கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்களின் கீழ் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. எனவே அவற்றை அறவிடுவதற்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என்று நிதியம் கருதுகிறது. | பிணைகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து பெறவேண்டிய வருமானத்தின் எஞ்சி மீதிகளை தாமதிக்காது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியல் கழிவுடன் மாற்றிய நிலுவைத் தொகை ரூபா 10,755,461 ஆகும். அதில் ரூபா 10,663,441 அல்லது 99 சதவீதம் இந்த அறிக்கையின் திகதி வரை ஒப்பந்ததாரர் ஒருவரிடமிருந்து கடந்த 02 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது உள்ளது. ஆகையால், முறையான விசாரணையை மேற்கொண்ட பின்னர் இந்தத் தொகையை பொறுப்புவாய்ந்த தரப்பிடமிருந்து அறவிடுதல் | நிதியமானது, ஒப்பந்ததாரர்களுக்கு உதவுதல், உறுதி செய்தல் என்ற நல்ல எண்ணத்துடனம் அறவிடுதல் தாமதம் ஏற்படக்கூடிய செயற்திட்டங்களுக்கு காசு உடபாய்ச்சலை குறைநிரப்பு செய்வதற்காக நிதியை வழங்குகிறது. தேவைக்கேற்ப பிணைகள் மற்றும் உத்தரவாதங்களை கோருவதற்கு ஒப்பந்த வழங்குனர்களுக்கு சுதந்திரம் உள்ளது. இந்தச் | நிலுவைத் தொகையை ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வேண்டும்.

சூழ்நிலையில், ஒப்பந்த வழங்குனர்களின் எதிர்மறை யான அணுகுமுறையின் காரணமாக, பட்டியல்கள் கழிவுநீக்கம் செய்யப்பட்ட பின்னர், பணத்தை அறவிடக் கூடிய/முடியாத சூழ்நிலை யில் நிதியம் கடமைப்பட்டிரு க்க வேண்டிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இது போன்ற சந்தர்ப்பங்களில் அத்தகைய தொகையை அறவிடுவதற்கு ஒப்பந்ததார ர்களிற்கு எதிராக வழக்கு களை தொடர்வதற்கு ஏற்ப டுவதுடன் அரசாங்க ஒதுக்கீடு இல்லாத சூழ்நிலைகளில் அறவீடுகளை மேற்கொள்ள நிதியம் காத்திருக்க வேண்டி யுள்ளது.

(இ) 2011 முதல் 2021 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 88,624,386 கூட்டுத்தொகையான தேவைக் கடன்பட்டோர் நிதியத்தால் ஒப்பந்த காரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும், அதில் ரூபா 884,323 அல்லது 1 சதவீதம் மாத்திரமே மீளாய்வாண்டில் அறவிட ப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் இது தொடர்பில் ரூபா 75,674,224 அல்லது மொத்த நிலுவைத் தொகையில் 85 சதவீதம் நட்டக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டதைத் தவிர்த்து இந்தத் தொகையை அறவிடுவதற்கும் அறவிடப்படாதிருப்பதற்கான இடரைக் குறைப்பதற்கும் காத்திரமான நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 4,676,308 தொகை யான தேவைக் கடன்பட்டோர் உரிய அங்கீகாரம் பெறப்படாது 2019 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

கடந்த இரண்டு தசாப்தங் களில் சில உத்திரவாதங்கள் ஒப்பந்த வழங்குநர்களால் கோரப்பட்டமையின் காரண மாக நிதியத்தால் ஒப்பந்த வழங்குனர்களிற்குச் செலுத் திய அத்தகைய பணத்தை ஒப்பந்தக் காரர்கள் திருப்பிச் செலுத்தாததால், அந்தப் பணத்தை அறவிடுவதற்காக நடுவர் மன்றத்தை நிதியம் நாடியது.

இந்தச் செயல்பாட்டின் போது பெரும்பாலான வழக்குகளில், நிதியத்துக்கு ஆதரவாக தீர்ப்புகள் வழங்கப்பட்ட போதிலும் ஒப்பந்தக்காரர்கள் பணத்தைச் திருப்பிச் செலுத்தவில்லை. எனவே, நிதியம் உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்திற் குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், அங்கு பெரும்பாலான வழக்குகள் நிலுவையில் உள்ளன. கணி சமான பணத்தை செலவிட்ட பின்னரும் அவற்றை அறவிடு வதற்கு பல ஆண்டுகள் தேவைப்படுகின்றது.

எனவே, அறவிடக்கூடிய சரி யான காலத்தை நிதியித்தால் எதிர்வுகூற முடியாதுள்ளது.

அறவிடப்படாமைக் கான இடரைக் குறைப்பதற்காக நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தேவைக் கடன்பட் டோரை தாமதமின்றி அறவி டுவதற்கு பயனுள்ள நடவடி க்கை எடுக்கப்ப டுதல் வேண்டும்.

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிணைப் பத்திரங்கள் மற்றும் உத்திரவாதங்கள் சார்பாக பெற வேண்டிய வருமானத்தில் உள்ளடங்கியுள்ள மொத்தம் ரூபா 11,694,080 தொகையான எதிர்மறை மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியவை களாகக் கருதப்பட்டுள்ளதுடன், இந்தத் தொகையில் முந்தைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் அடையாளம் காணப்பட்டிருந்த ரூபா 3,431,981 மொத்தத் தொகையான 11 எதிர்மறை நிலுவைகளும் உள்ளடங்கியிருந்தது. எனவே, இந்த எதிர்மறை நிலுவைகளின் தீர்ப்பனவு கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாக உள்ளது. | 2022 சனவரி முதல் கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், தற்போது பெரும்பாலானவை அடையா ளம் காணப்பட்டுள்ளதுடன், மீதமுள்ளவற்றை சரிசெய்யும் பணி இடம்பெற்று வருகின்றது. | எதிர்மறை மீதி களை கணக்கிண க்கம் செய்வதற்கும் விரைவாக இனங் காண்பதற்கும் நட வடிக்கை எடுத்தல் வேண் டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற் கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1999 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய நிதிய த்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதி யின் 9(எ.்.ப்) பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பாள ர்கள் எந்தவிதமான சம்பள கொடுப்பனவுகளையும் பெறுவதற்கு உரிமையுடை யவர்கள் அல்லர், ஆனால் அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் எந்தவொரு செலவினத் தையும் திருப்பிச் செலுத் தலாம். அதற்கு நேர்மா றாக, மீளாய்வாண்டில், கடமைகளைச் செய்ததற் கான திருப்பிச் செலுத்து தல் எனக் குறிப்பிட்டு மொத்தமாக ரூபா 2,500,000 தொகையான மாதாந்த நிலையான கொடுப்பனவை நிதியம் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், நம்பிக் கைப் பொறுப்பாளர்கள் அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொண்டிருந்த செல | நம்பிக்கைப் பொறுப் பாளர்களின் அலுவலக பொறுப்புகள் மற்றும் செயலாற்றலை கவன மாக மதிப்பீடு செய்த பின்னர், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் செலவின மீளளிப்பை முன்கூட்டியே மதிப்பீடு செய்து ஒருமனதாக அதற்கு ஒப்புதல் அளித்தது. அதன்படி, மாதாந்த அடிப்படையில் செலுத்தப்படும் இந்த கட்டணம் நியாயமான தாகும். | நிதியத்தின் நம்பிக் கைப் பொறுப்பு உறுதியிலுள்ள விதிகளின்படி நிதியம் செயல்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வின விவரங்கள் கணக் காய்விற்கு சமர்ப்பிக்கப் படாததுடன் இது தொடர் பாக நிதிக் கூற்றுக்களில் சம்பந்தப்பட்ட தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் வெளிப்படுத்தப் பட்டிருக்காமை மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இல க்க பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் உள்வாங்கப் பட்ட நிதிப்பிரமா ணம் 876(3) | நியதிச்சட்டமற்ற ஏதேனும் நிதியமொன்றை தொடர்ந் தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணம் இருப்பின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன் றச் சட்டமொன்றால் சட்ட மாக்கப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும், 2022 மே 31 வரை இந்த தேவைப்பாட்டிற்கு அமைய செயற்பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சின் செய லாளரால் அதிகாரமளிக் கப்பட்டு இந்த நிதியம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், பொதுத் திறைசேரியின் செயலாளர் (எஸ்ரீ) தீர்ப்பாளராக தேவைப் படுகின்ற பொருத்தமான நடவடிக்கையை மேற் கொள்வார். | நிதியம் சுற்றறி க்கை ஏற்பாடுக ளுடன் இணங்கு தல் வேண்டும். |

## 1.8 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியம் ரெபோ மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால மற்றும் நீண்டகால முதலீடுகளில் ரூபா 2,333.66 மில்லியன் தொகையை முதலீடு செய்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 149.06 மில்லியன் தேறிய வட்டி வருமானமொன்றை உழைத்திருந்ததுடன் இந்த தேறிய வட்டி வருமானமானது மீளாய்வாண்டிற்கான மிகையின் 48 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந் தது. | 2015 - 2019 நிர்மாணத் துறையில் ஒரு கீழ்நோக்கிய போக்கு காணப்பட்டது. எவ்வாறாயினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு களில் “சௌபாக்கிய தூர நோக்கு” இன் கீழ் நிர்மாணத் துறையில் ஒரு ஏற்றம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், துரதிர்ஷ்ட வசமாக அரசா ங்கத்தின் அனைத்து அபிவி ருத்தி நடவடிக்கைகளும் நிதியத்தின் வரம்புக்கு அப்பா ற்பட்ட நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக பின்னடைவு கண்டுள்ளதுடன், கிடைக்கக் கூடிய தகவல்களின் அடிப்ப டையில் எதிர்காலத்தில் எந்த அபிவிருத்தி நடவடிக்கை களையும் முன்கூட்டியே கணிக்க முடியாதுள்ளது. | நிதி வருமானத்தை அதிகரிப்பதிலும் பார்க்க செயற்பாட்டு வருமானத்தை அதி கரிப்பதன் மீது முகாமைத்துவம் கவனம் செலுத்து தல் வேண்டும். |

எவ்வாறாயினும், நிதியத்தின் பொறுப்பு 2024 இன் இறுதி வரை காணப்படுவதுடன் 2024 அல்லது 2025 க்குள் புதிய அபிவிருத்தியுடன் ஒரு புதிய சகாப்தத்திற்கு நம்பிக்கை தருவதாக உள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 310,233,611 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 366,657,320 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 56,423,709 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. பிணைகள் அல்லது உத்தரவாதங்களிலிருந்தான வருமானம் மற்றும் ஐயக்கடன் மற்றும் நட்டக் கடனுக்கான ஏற்பாடு என்பன முறையே ரூபா 16,515,748 ஆல் குறைவடைந்தும் ரூபா 34,421,934 ஆல் அதிகரித்தும் இருந்தமையே இந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்கத்தின் 100,000 கி.மீ. மாற்று வீதிகள் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொத்தமாக ரூபா 27,730 மில்லியன் தொகை நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அதில் ரூபா 630 மில்லியன் தொகையை ஒப்பந்தகாரர்களிற்கு விடுவிக்காது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேற்படி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 288 ஒப்பந்தகாரர்களிற்கு 2021 திசெம்பர் 31 வரை நிதியம் தேவையான பிணைகள் மற்றும் உத்தரவாதங்களை வழங்கியிருந்ததுடன், அந்த ஒப்பந்தகாரர்களால் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 951 ஆகும். அந்த வீதிச் செயற்திட்டங்களில் 2021 திசெம்பர் 31 வரை 149 செயற்திட்டங்கள் அல்லது 15.6 சதவீதமானவை மாத்திரமே பூரணப்படுத் தப்பட்டிருந்ததுடன், அத்திகதியில் உள் ளவாறு ஏனைய | ஒப்பந்த வழங்குனரால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு பிணைப் பத்திரங்கள் மற்றும் உத்தரவாதங்களை வழங்குவதற்கு வாய்மொழியாக நிதியம் இணக்கப்பாட் டிற்கு வந்திததுடன் அனை த்து ஒப்பந்ததாரர் கொடுப் பனவுகளையும் நிதியத்தின் மூலம் செலுத்துவதற்கும் ஒப்பந்தக்காரர்கள் மேற்கொண்ட அனைத்து ஒப்பந்தங்களினதும் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை உறுதிசெய்த பிறகு நிதியை விடுவிப்பதற்கும் இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.<br><br>மேலும், இந்தத் தேவையானது ஒப்பந்த வழங்குநருடன் சம்பந்தப்பட்ட அந்தந்தப் பிணைப் | இது தொடர்பில் தேவைப்படுகின்ற தெளிவான நிபந்த னைகளை உள்ள டக்கி நிதியத்திற் கும் நெடுஞ்சா லைகள் அமைச்சு க்கும் இடையே உடன்படிக்கை அல்லது புரிந்து ணர்வு உடன்ப டிக்கை கைச்சாத் திடப்பட வேண்டு மென்பதுடன் தேவைக் கடன்பட் டோர் மீதி அதிகரி க்கும் இடரைக் குறைப்பதற்காக குறித்த காலத்தில் நிர்மாண நடவடி க்கைகள் பூரணப் படுத்தப்படுவதை உறுதிப்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த வேலைகளின் பௌதீக செயல் முன்னேற்றம் 51 சதவீதம் மாத்திரமேயாகும். மேலும், மேற்படி வீதி அபிவிருத்திச் செயற் திட்டத்தை நிதியத்தின் உதவியுடன் அமுல்படுத்துவதற்காக நிதியத்திற்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கும் இடையே உடன்படிக்கை அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பத்திரங்கள் மற்றும் உத்தரவாதங்களில் ஒரு சிறப்புச் சொல்லாக உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>எந்தவொரு வாதமும் இல்லாமல் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதால், உத்தரவாதம் அளிப்பவர் எப்பொழுதும் கொடுக்கப்பட்ட விதிமுறைகளின்படி ஒப்பந்த வழங்குனருக்கு நேரடியாகக் கடமைப்பட்டுள்ளார். | நிதியம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துக்கு மேலாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய ஒப்பந்தக் காரர்களிற்கு விடுவிப்பதற்காக பல்வேறு தரப்பினர்களிடமிருந்து ரூபா 85,695,106 தொகை நிதியத்துக்கு கிடைத்திருந்தது டன் அதில் ரூபா 7,162,781 மற்றும் ரூபா 1,776,129 தொகைகள் முறையே 03 – 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாகவும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் உரிய ஒப்பந்தக் காரர்களிற்குச் செலுத்தப்படவில்லை. ஆகையால், இந்த பணத்தின் எதிர்கால தீர்ப்பனவு குறித்த பொறுப்பை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | ஒப்பந்ததாரர்களுக்கான கொடுப்பனவுகள், நிதியம் திருப்தி அடையும் வரையிலும் மற்றும் இடரைக் குறைக்கும் வரையிலும் நிதியத்தில் நிறுத்தி வைக்கப்படுகின்றது. அரசாங்கத்தால் அல்லது நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்பட்டதா என்பதைப் பொருட்படுத்தாமல், ஏறத்தாழ அனைத்து நிர்மாணத் திட்டங்களும் காலந்தாழ்த்தியும் கிரயத்தை விஞ்சியும் இருப்பதன் காரணமாக சில நோக்கெல்லைகள் பூரணப்படுத்தப்படாதிருப்பதால் வெற்றிகரமான செயற்திட்டங்கள் குறித்து ஒப்பந்த வழங்குனருக்கும் ஒப்பந்தக் காரர்களிற்கும் எதிர்வுகூற முடியாது என்பதை தொழில்துறையில் நிலவும் சூழ்நிலை நிரூபித்துள்ளது. இந்தச் சூழ்நிலையானது, ஒப்பந்தக்காரரின் பணத்தை அதற்கான ஆபத்தும் பொறுப்பும் குறைவடையும் வரை, கணிசமான காலத்திற்கு நிதியத்திடம் வைத்திருக்க வேண்டியதாயிற்று. | ஒப்பந்த வழங்குனர்களிடமிருந்து கிடைக்கின்ற பணம் தாமதிக்காது ஒப்பந்தக் காரர்களிற்கு விடுவிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 2,984,000 பெறுமதியில் முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) ஒன்றை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் உடன் நிதியம் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தது. அதில் ரூபா 2,088,800 அல்லது ஒப்பந்தப் பெறுமதியில் 70 சதவீதத் தொகை முதலாவது மற்றும் இரண்டாவது தவணைப் பணமாக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் இற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த MIS ஆனது 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட் டிருக்கவில்லை. | கவனமாக மதிப்பீட்டு செய்த பின்னர், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள பொதியின் ஒரு பகுதிக்கு முற்பணமாக செலுத்தப் பட்ட பணம் இதுவாகும் என்பது கண்டறியப்பட்ட போதிலும் பொதி முழுமை யாக பூரணப்படுத்தப்படாமையால் ஏற்கனவே செலுத்தப்பட்ட முழு கட்டணத்தையும் நிதியம் கோரியது. நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு அறிவித்த பின்னர், பொதியினை இரத்துச் செய்து முழுப்பணமும் மீளக் கோரப்பட்டது. நிதியமானது அதன் சொந்த மதிப்பீட்டில் அவர் களுக்கு செலுத்தப்பட்ட பணத்தை ஈடுசெய்வத ற்காக ஏற்கனவே செய்யப்பட்ட வேலையின் ஒரு பகுதியாக திருப்தி அடைந்துள்ளது. எனவே, நிதியத்துக்கு இதனால் எந்த இழப்பும் இல்லாத போதிலும் முழுமையான திட்டமும் இழக்கப்ப டுவதால் முழு கட்டணமும் கோரப்பட்டுள்ளது. | மேலும் தாமதிக்காது MIS இனை பூரணப்படுத்தி செயற்படுத்துவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதியத்தின் கூட்டிணைந்த நோக்கங்களின்படி, நிறுவனத்திற்குள் கணினிமயமாக்கப்பட்ட கணக்கீட்டு முறைமை (QuickBooks அல்லது QB) ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், QB ஐ கொள்வனவு செய்வதற்காக ரூபா 160,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த நோக்கத்தை நிதியத்தால் அடைய முடிந்திருக்க வில்லை. இதன் விளைவாக, நிதியம் அதன் முழுமையான கொடுக்கல் வாங்கல்களையும் கைமுறையாகவும் "எக்செல் ஷீட்" களிலும் இன்னும் பதிவு செய்து வருகின்றது. எனவே, QB இனை கொள்வனவு செய்வதற்காக ஏற்பட்ட செலவு பயனற்ற செலவாகியிருந்தது. | IT தீர்வு வழங்குபவர் உரியமுறையில் செயலாற்றாமையால், வேலையின் அளவைக் கருத்தில் கொண்டு, கைமுறை வேலையைக் குறைத்து, ஒரு அரை-தன்னியக்க ஆயத்தப் பொதி கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு தொடரப்பட வேண்டிய போதிலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஊழியர்களின் வருகை குறைவு காரணமாக இதனை தொடர்ச்சியை பராமரிக்க முடியவில்லை. | செலவிடப்பட்ட பணத்திலிருந்து உச்ச பயனைப் பெறுவதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) இந்த நிதியம் 1999 இல் ஸ்தாபிக்கப்பட்டதுடன் 2000 முதல் 2005 வரையான காலப்பகுதியில் நான்கு சந்தர்ப்பங்களில் பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 55,000,000 தொகை மூலதன மானியமாக பெறப்பட்டிருந்தது. எனவே, நிதியத்தினால் ஈட்டப்படுகின்ற தேறிய இலாபம் முழுவதும் அல்லது இலாபத்தின் ஒரு பகுதி ஒவ்வொரு ஆண்டும் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 602,518,233 தொகை நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதிலும், நிதியமானது அதன் தொடக்கத்திலிருந்து ஒரு சதத்தை கூட பொது திறைசேரிக்கு செலுத்தியிருக்கவில்லை, மேலும், 2021 சனவரி 01 இல் உள்ளவாறு நிறுத்தி வைக்கப்பட்ட வருவாயில் ரூபா 500,000,000 பொது திறைசேரியின் அனுமதியைப் பெறாமல் ”உட்கட்டமைப்புக்கான ஒதுக்கீடு” என்ற கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | மானியம் மற்றும் சேமிப்பு ஆகியவை சேவையை வழங்குவதற்கான வரம்பை அதிகரிக்க பயன்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக கையில் அதிகப்படியான நிதி இல்லை.<br><br>நிதியத்தின் ஆரம் முதல் ஒரு குறிப்பிட்ட இடத்தை வாடகைக்கு எடுத்திருந்ததாலும், நிதியத்துக்கென சொந்தமாக செயலகத்தை நிறுவுவதற்கு கடந்த கால ங்களில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாலும், நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்துடன் இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டது. | நிதியம் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக இருப்பதால் நிதியத்தால் ஈட்டப்பட்ட மிகை அல்லது அதன் ஒரு பகுதி ஒவ்வொரு ஆண்டும் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். |

**3.2 கொள்வனவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டில் நிதியத்தால் ரூபா 6,061,011 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பெறப்பட்டிருந்த போதிலும், 2006 இன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது கொள்வனவு வழிகாட்டல்களிலுள்ள 4.2 மற்றும் 4.2.2 ஆம் வழிகாட்டல்களின் படி 2021 ஆம் ஆண்டிற்காக பிரதான கொள்வனவுத் திட்டமும் கொள்வனவு கால அட்டவணையும் நிதியத்தால் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதியத்திடம் தற்போது 2021 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டமொன்றும் கால அட்டவணையும் காணப்படுவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கோரிக்கையின் படி கணக்காய்வு நோக்கத்திற்காக அது ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு வழிகாட்டல்களிலுள்ள வழிகாட்டல்களின் படி பிரதான கொள்வனவு திட்டமும் கொள்வ னவு கால அட்டவணையும் நிதியத்தால் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களிலுள்ள 2.14.1 ஆம் வழிகாட்டலின் படி மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 878,321 பெறுமதியான 11 கொள்வனவுகள் தொடர்பில் நிதியத்தால் ஆகக்குறைந்தது மூன்று கூறுவிலைகள் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, நிறுவனத்திற்கு அதிகூடிய நிதிசார் நலனையும் தரமான பொருள் அல்லது சேவை வழங்குனரையும் பெறுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | நிதியம் அநேக சந்தர்ப்பங் களில் பதிவு செய்யப்பட்ட/ தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடையே கூறுவிலை கோரல்களை மேற்கொண்டிருந்த போதிலும், அவர்கள் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலத்தில் அதிகளவு வேறுபட்ட கூறுவிலைகளை சமர்ப்பிக் கத் தவறியிருந்தனர். | கொள்வனவு வழிகாட்டல் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் படி நிதியம் செயற்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணங்கள் கோவையினை திருத்தியமைத்து வெளியிடப்பட்ட 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையினால் உள்வாங்கப்பட்ட நி.பி. 877(2)(உ) இன் பிரகாரம் நிதியத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர், குறித்த ஏற்பாடுகளிற்கு அமைய மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் 150 நாட்களிற்குள் பாராளுமன்றித்தல் சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் நிதியம் அதன் 2020 மற்றும் 2021 இற்கான செயலாற்றல் அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | அனைத்து ஆண்டு அறிக்கைகளும் செயலாற்றல் முன்னேற்றத்தை உள்ளடக்கியுள்ளதுடன், 2000 ஆம் ஆண்டு முதல் அவை தயாரிக்கப்பட்டு, பிரதிகள் உரிய தரப்பினருக்கு தொடர்ந்து அனுப்பப்பட் டன, ஏனைய இரண்டு மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அவை உடனடியாகக் கிடைக்கும். அவற்றை நேரடியாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நிதியத்துக்கு முடியாது என்பதால் பி.ப. (பொது) நிதி மற்றும் அதிகாரிகள் மூலம் அவை சமர்ப்பிக்கப் படும். திறைசேரியின் செயலார், நிதி அமைச்சு, அந்தந்த அதிகாரிகள்/அமைப்புகளாகும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்படி வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒரு தகுதிவாய்ந்த கணக்காய்வாளரை நிதியம் நியமித்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு குழுவானது ஒரு சில அலுவலர்களைக் கொண்டிருப்பதுடன் உள்ளகக் கணக்காய்வு தொடர்ந்து நடத்தப்படுகிறது. குறைபாடுகளை அடையாளம் காணும்போது, அவை உடனடியாக சரிசெய்யப்பட்ட போதிலும், பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை. துரதிர்ஷ்டவசமாக 2020 ஆம் ஆண்டின் நடுப்பகு தியில் இருந்து செயல் முறையை தொடர்ந்து மேற்கொள்ள | நிதியத்தின் செயற்பாடுகள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்பத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முடியவில்லை என்பதுடன் நிலைமை இயல்பு நிலைக்கு வந்தவுடன் செயல்முறையை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். | |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணங்கள் கோவையினை திருத்தியமைத்து வெளியிடப்பட்ட 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையிலுள்ள நி.பி. 877(1)(இ) இன் பிரகாரம் ஆளுகைத் தரப்பினால் வருடாந்தம் பாதீடு தயாரிக்கப்பட்டு நடப்பு நிதியாண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். இருப்பினும், நிதியத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2022 சனவரி 21 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இற்கான பாதீடு 2020 யூன் மாதத்தில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் அங்கீகரிக்கப் பட்டதுடன் 2022 சனவரி 21 ஆந் திகதி கணக்காய்வாளரின் கோரிக்கைக்கு அமைய அது அனுப்பவைக்கப்ப ட்டது. | சுற்றறிக்கையில் தரப் பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டு நடப்பு நிதியாண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற் காக தேசிய பாதீட் டுப் பணிப்பாளர் நாய கத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண் டும். |